[1979 பிப்ரவரி 17

2. ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி)

(அ) தந்தை பெரியாருடைய இதயம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் காலையில் அறிவித்தபடி தந்தை பெரியார் அவர்களுடைய இதயமும் இன்னும்சில உறுப்புக்களும் பேரவைத் தலைவரின் அறையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அது இரண்டரை மணி வரை அங்கே இருக்கும். அதற்குப் பிறகு வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்படும். ஆகவே அதற்குள்ளாக பார்க்க விரும்புகின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவைத் தலைவருடைய அறைக்குச் சென்று பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து திரு. ரா. மார்க்கபந்து அவர்களைப் பேச அழைக்கிறேன்.

(5) அரசினர் தனித் தீர்மானம். (தொடர்ச்சி)

அரசியலமைப்பு 45-வது திருத்தச் சட்டத்திற்கு ஏற்பளிப்பது குறித்து (தொடர்ச்சி)

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று 45-வது அரசியல் சட்டத் திருத்த மசோதாவை இந்தத் தமிழகத்துச் சட்ட மன்றம் ஆதரிக்கின்றதா இல்லையா என்பதைக் காண்பதற்குரிய ஒரு அளவு கோலாக இங்கே விவாதத்திற்கு வைத்திருக்கிறார்கள். இதிலே ஒரு சில கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்வது என்று இல்லாமல் நம்முடைய உள்ளத்திலே தோன்றுகின்ற கருத்துக்களைச் சொல்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். குறிப்பாகக் கல்வியைக் கன்கரன்ட் லிஸ்டிலே வைத்திருக்கிறார்கள். அந்தந்த ஸ்டேட்டிலே இருந்தால்தான் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற கல்வி, கலாசாரம், பண்பு இவைகளை உள்ளடக்கி அந்தக் கல்வி முறையானது அந்தப்பகுதி மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே அமையும். அப்படியில்லாமல் பொதுவாக அது கன்கரன்ட் லிஸ்டிலே இருந்தால் ஒருவித அச்சத்தை உண்டுபண்ணுவதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடும், காரணம் சொல்ல விரும்புகிறேன். இந்தியைப் புகுத்துவதற்கு முயற்சிகள் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

[பிற்பகல் 1.00]

இந்தியைப் பரப்புவதற்கு எவ்வளவு தொகை வேண்டுமானாலும் செலவு செய்யலாம் என்ற சட்டமும் இருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கிற நேரத்தில் கல்வி மத்திய மாநில அரசுகளின் கன்கரன்ட் லிஸ்டில் இருப்பதால் ஒரு